03.09.2025

MC.22/2024

PW-1, பானுபிரியா

(எதிர்மனுதாரர் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்)

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலமானது யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. திருமணத்தின் போது நான் என்ன படித்திருந்தேன் என்றால் பி.காம் முடித்திருந்தேன். அதன் பிறகு எம்.காம் முடித்துவிட்டேன். நான் தற்போது பி.கே.என் பள்ளி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் வேலை பார்த்து வந்த விபரத்தை நான் எனது மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ Asset and Liability வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஏனென்றால் அந்த சமயத்தில் எனது அப்பா தவறிவிட்டதால் வேலையில் இருந்து நின்றுவிட்டேன். அதன் பிறகு பணியில் சேர்ந்துவிட்டேன். தற்சமயம் வேலை பார்த்து வருகிறேன். 2 மற்றும் 3 ம் மனுதாரர்கள் எங்கு படிக்கிறார்கள் 2ம் மனுதாரர் பி.கே.என் பெண்கள் மேல்நிலை பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கிறார். 3ம் மனுதாரர் பி.கே.என்.மெட்ரிக்குலேசன் பள்ளியில் 1ம் வகுப்பு படிக்கிறார். 2ம் மனுதாரர் படிக்கும் பள்ளியானது அரசு உதவி பெறும் பள்ளி என்றால் சரிதான். 3ம் மனுதாரர் படிக்கும் பள்ளியும் அரசு உதவி பெறும் பள்ளி என்றால் சரிதான். திருமணம் முடிந்த புதிதில் நான் எதிர்மனுதாரருடன் அவரது வீட்டில் வசிக்கவில்லை என்றால் நான் வசித்து வந்தேன். திருமணத்தின் போது எதிர்மனுதாரருக்கு 5 பவுன் நகை போடவில்லை என்றாலும் 1 -1/2 பவுன் தான் போடப்பட்டது என்றால் சரியல்ல. 5 பவுன் தான் போடப்பட்டது. நான் சொன்ன மாதிரி அவ்வாறு 5 பவுன் நகை போடவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும் அவரது வீட்டாரும் என்னை கூடுதல் வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியது சம்பந்தமாக நான் எதுவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு கொடுத்திருந்தால் அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எவ்வித சம்பவமும் நடைக்கவில்லை என்பதாலும் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எதாவது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் என்னை குடிபோதையில் அடித்து கொடுமைபடுத்தியது சம்பந்தமாகவோ அவர் வேறு பெண்ணுடன் தொடர்பு இருந்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்து அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1ல் காட்டப்பட்டுள்ள முகவரி குறிஞ்சி நகர் திருமங்கலம் முகவரி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4ல் பெற்றோரின் நிரந்தர முகவரி குறிஞ்சி நகர் திருமங்கலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்திருந்தால் எனது முகவரி சென்னம்பட்டியில் உள்ள முகவரி இருந்திருக்கும் என்று சொன்னாலும் நான் அவ்வாறு வாழவில்லை என்பதால் தான் எனது பெற்றோர்கள் உள்ள முகவரி தற்போது உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடைய ஆசைகளுக்கும் வற்புறுத்தலுக்கும் இனங்க அவரது சொந்த ஊரை விட்டுவிட்டு திருமங்கலத்தில் என்னுடன் குடித்தனம் நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் முடிந்து 11 மாத காலத்தில் எனது முதல் குழந்தை பிறந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் திருமணம் முடிந்த புதிதில் இருந்து என்னுடன் அன்பும் பாசமாக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

2 மற்றும் 3 மனுதாரர்களை எதிர்மனுதாரர் பிறந்ததிலிருந்து பார்த்து பராமரிக்கவில்லை என்று சொல்லியிருப்பது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் மனுதாரர் பிறந்த பிறகு பெரியோர்கள் மூலம் பேசும் போது கூடுதலாக 5 பவுன் எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. உறவினர்கள் நண்பர்கள் மூலம் முதலில் பஞ்சாயத்து பேசும் போது அந்த நபர்களை குறிப்பிட்டு எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. கூடுதல் வரதட்சணை கேட்டு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் தான் எந்த நபரையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது தாயார் மற்றும் சகோதரி ஆகியோர்கள் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள்

என்பதும் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு அடித்து கொடுமைப்படுத்தி வந்தார் என்றும் மனுதாரர்களை சரியாக பராமரிக்காமல் இருந்துவந்துள்ளார் என்பதும் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.2020 ஆம் ஆண்டு நானும் எதிர்மனுதாரம் சேர்ந்து வாழ்ந்த போது நாங்கள் நடத்திய இல்லவிழாவிற்கு வந்த மொய் பணம் ரூ.7 லட்சத்தை நான் தான் வைத்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் தற்போது திருமங்கலத்தில் வசித்து வரும் வீட்டிற்கு எதிர்மனுதாரர் தான் வாடகை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பலசரக்கு கடை நடத்திவருகிறார் என்று மனுவில் சொல்லியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்தின் போது 12ம் வகுப்பு படித்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பராமரிப்பு என்னும் வகையில் எனக்கும் மற்ற மனுதாரர்களுக்கும் கேட்டிருக்கும் தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3 மனுதாரர்களின் பள்ளி கட்டணத்தை காட்டக்கூடிய எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் தாக்கல் செய்யமுடியும். அதே போல் எனது மனுவில் எதிர்மனுதாரர் பாலாஜி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி மாதம் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் வருமானம் ஈட்டி வருகிறார் என்றும் விவசாயத்தின் மூலமாக ரூ.10ஆயிரத்திற்கு மேல் ஈட்டி வருகிறார் என்று உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் உடன் பிறந்த சகோதரர் மற்றும் சகோதரி உள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தாயார் உயிருடன் உள்ளார். அதனால் அவரை பராமரிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் தற்போது வேலை பார்க்கும் நிறுவனத்தில் மாதம் சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.7000/-. நான் மாதச்சம்பளம் ரூ.15,000/-க்கு மேல் சம்பளம் பெறுகிறேன் என்றுசொன்னால் சரியல்ல. நான் அதிகமான படிப்பு படித்துள்ளதாலும் வேலை பார்த்து வருவதாலும் என்னை நானே பராமரித்து கொள்ள வசதி உள்ளதாலும் என்னை பொறுத்தவரை எதிர்மனுதாரர் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3 மனுதாரர்களை பொறுத்து எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பராமரிக்க கடமையுள்ளது என்று சொன்னால் சரிதான்.